சிறப்பிதழ்
**Special Issue**

3-4 பங்குனி 2052
16th - 17th March 2021

ISSN : 2321 - 984X

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

# நவீனத் தமிழாய்வு

*(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)*

*Journal of*

# Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

சிறப்பிதழ் : தமிழ் உயராய்வுத்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி) எளையாம்பாளையம், திருச்செங்கோடு
முதுகலைத் தமிழ்த்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மகளிர்) வீராச்சிபாளையம், சங்ககிரி

# தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல்

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**

**முனைவர் ம. கவிதா**
**முனைவர் செ. ஜெயந்தி**

*Published by*
**RAJA PUBLICATIONS**
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

19 பகுதி-4
Part -4

Scanned by TapScanner

# இருளப்பட்டி நடுகற்களும் அதன் வரலாறும், வழிப்பாடும்

அ. சுமதி

முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்), விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி,) எளையாம்பாளையம், திருச்செங்கோடு, தமிழ்நாடு, இந்தியா.

செ. ஜெயந்தி

நெறியாளர், விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி,) திருச்செங்கோடு, தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச் சுருக்கம்**

பண்டையக்காலம் முதலே நம் முன்னோர்கள் எந்தவொரு செயலையும் நினைவிலிருத்தும் பொருட்டு அமைக்கப்படும் சின்னம் நினைவுச்சின்னம் என அழைக்கப்படும். நினைவுச்சின்னங்கள் அமைக்கும் வழக்கம் தோன்றி காலம் அருதியிட்டுக் கூறமுடியாத அளவிற்கு காலம் பழமை வாய்ந்தது. இவைகள் அழியாச் சின்னங்களாக நின்று அன்றைய சமுதாய மக்களின் சூழல்களையும், பண்பாடுகளையும் நமக்கு காட்டுவனவாக உள்ளன.

பண்டையக்காலம் முதல் மனிதன் ஒரு பொருளை அடைவதற்க்குப் பெரும் முயற்சிகள் செய்துள்ளான். அதனால் போர்கள் எழுந்துள்ளன. போரில் ஒருவன் வெற்றி பெறுவதும் ஒருவன் தோல்வி அடைவதும் உலக வழக்கு ஆகும். வெற்றிகனியை கொய்து உயிர் நீத்தான் எனில் அவனுக்கு மக்கள் உயிர் நீத்த வீரனின் நினைவாக ஒரு கற்பலகையில் அவனுடைய உருவமும் வீடும் பெயரும் பொறித்து நடுவது மரபாக கொண்டு உள்ளனர்.

இதை தொல்காப்பியமும், சங்க இலக்கியங்களும், புறப்பொருள் வெண்பா மாலையும், நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரமும் கூறுகின்றன. அவ்வாறாக போரில் இறந்த வீரர்களுக்காக எடுக்கப்பட்ட நடுகற்களே இருளப்பட்டியில் அமைந்துள்ள சின்னேரி வேட்டியப்பன் தலமாகும்.

சின்னேரி வேட்டியப்பனை வணங்கும் மக்கள் பல்வேறுப்பட்ட இனத்தை சார்ந்தவர்கள். இனவேறுபாடு இல்லாதவர்கள்: இவ்வட்டாரத்தில் உள்ள மக்கள் வழிபடும் சின்னேரி வேட்டியப்பன் தனித்தன்மை கொண்ட தெய்வமாகும். அத்தெய்வத்தின் வரலாறு, கோயில் அமைப்பு. மக்களின் வழிபாட்டு முறைகள் , நம்பிக்கைகள் ஆகியன இங்கு ஆராயப்படுகின்றன.

போரில் இறந்த வீரனுக்கு அவன் நினைவாக கல் எடுத்து, அதில் அவனது ஆவி குடியிருப்பதாகவும், அது வழிபடுவோர்க்கு நன்மையைத் தரும் எனவும் நம்பும் வழக்கம் மக்களிடம் இருந்திருக்கிறது. இதன் மூலமாக நடுகல்லாகி நின்ற வீரக்காரன் சிறுதெய்வ வழிபாடாக உயர்த்தப்பட்டுள்ளான் என்பதை சின்னேரி வேடியப்பன் தல வரலாற்றின் மூலமாக இக்கட்டுரையின் வழியாக அறியும் செய்தியாகும்.

**முன்னுரை:**

அறத்தை தம் உயிரினும் மேலாகக் கருதி வாழ்ந்த தமிழன், அந்த அறத்தைப் பாதுகாத்துப் போற்றவே மறப்பண்புகளையும் பெற்று வாழ்ந்து வந்துள்ளார்கள் என்பதை இடைக்குன்னூர்கிழார் என்னும் சங்கப்புலவர் இந்த உலகத்தின் இயல்பை கூறும் பொழுது

"ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்
புதுவது அன்று இவ்வுலகத் தியற்கை"[1]

என்று கூறுவதை சிந்திக்க வேண்டியுள்ளது. நாட்டின் பெரும் செல்வமாக கருதப்படும்



Scanned by TapScanner

ஆநிரைகளைக் கவர்ந்து பாதுகாக்கும் வழியே போருக்கு அடித்தளமாக அமைத்து விடுகிறது. வீரமும், போரும் பண்டையத் தமிழரின் வாழ்வின் அடிப்படைகளாகவும், அன்றாட நிகழ்ச்சியாகவும், அணிகளாகவும், விளக்கின. மார்பின் காயம் வீரத்தின் சான்றாக கருதப்பட்டது. அம்பும், வில்லும், வாளும், வேலும், குந்தமும், கோலும், முசலும் முதலிய ஆயுதங்கள் போருக்கு பயன்படுத்தப்பட்டன. எனவே பல்லவர் நடுகற்கள் இருளப்பட்டி (பாப்பம்பாடி) என்றும் வழங்கப்படும் ஊரில் காணப்படும் பல்லவர்கால நடுக்கற்களின் வரலாற்று குறிப்புகளையும் அதன் தலவழிப்பாட்டு முறைகளையும் காண இருக்கிறோம்.

**நடுகல் வழிபாடு:**

இனகுழுத் தலைவர்கள், கொடிய விலங்குகள், இயற்கையின் சிற்றம் ஆகியுவற்றிலிருந்து தம்மை காப்பாற்றிய வீரர்கள் முதலானோர் அக்காலத்தில் போற்றத்தக்கவர்களாகவும் வழிப்படத்தக்கவர்களாகவும் சமுதாயத்தில் உயர்நிலை பெற்று விளங்கினர். அவர்கள் மக்களை காக்கும் முயற்சியில் இறந்தப்படும் போது மக்கள் அவர்களை கல்லாக வழிப்பட்டனர். "வீரர் போரில் இறந்தால் ஒரு கல்லில் இறந்தவர் வடிவையும் அவர் புரிந்த வீரச்செயல்களையும் வரைந்து இறந்த இடத்தில் நட்டு வழிப்படுவது முற்கால வழக்கு" என்ற கருத்து இங்கு நோக்கத்தாகும். எனவே, "நடுக்கல் வணக்கமும் கிராமத் தெய்வமாக கொள்ளப்படுகிறது" என்ற கருத்து சுட்டிகாட்டத்தக்கதாக உள்ளது.

மக்கள் தொடக்க காலத்தில் இறந்தவர்களை புதைத்தும் பின்னர் அவ்விடத்தில் கல்லினை நட்டும் வழிப்பட்டு வந்தனர் என்பதையும் அறியமுடிகிறது. சின்னேரி வேடியப்பன் கோவிலில் நடுகல் முதலில் எழுந்தருளிய இடத்திலேயே வேடியப்பன் சிலை காணப்படுகிறது.

தொல்காப்பியர் குறிப்பிடும் பெரும்படையே நாளடைவில் நாட்பலி காலை வழிபாடாகிறது. பின்னர் ஆண்டிற்கொருமுறை செய்யும் வழிபாடாக மாறுகிறது. சோற்றில் இருந்து தயாரிக்கப்படும் தோப்பிக்கள் நடுகல்லுக்குப் படைக்கப்பட்டுள்ளது.

காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்
சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தல் என்று
இருமூன்று மரபில் கல்லொடு புணர……[2]
(புறத்.5:19-21.)

**சங்க இலக்கியம் புறநானூறு வாயிலாக அறியப்படும் செய்தி:**

பல்லா தழீஇய கல்லா வல்வில்3
உழகைக்குரற் கூகை அழைப்ப ஆட்டி
நாகுமுலை அன்ன நறும்பூங் கரந்தை
விரகுஅறி யாளர் மரபிற் சூட்ட
நிரைஇவண் தந்து நடுகல் ஆகிய[3]

'கல்லா வல்வில்' என்பதில் 'வில்' என்பது வில்லேந்திய வீரரைக் குறிக்கிறது. 'கல்லா' என்பது, அவர்கள் வழிவழியாக வில்லைப் பயன்படுத்துவதில் திறமை மிகுந்தவர்களாகையால் அவர்கள் வில்லைப் பயன்படுத்துவதற்குப் பயிற்சி பெறத் தேவையில்லை என்பதைக் குறிக்கிறது.

இந்த புறநானூற்று செய்யுளின் வாயிலாக நடுகல் வீரனின் வீரத்தைப்பற்றி அறிந்துக்கொள்ள முடிகிறது.

**விஷ்ணுவர்மனின் இருளப்பட்டி நடுகல்:**

பல்லவர் நடுகற்களில் இருளப்பட்டி என்னும் பாப்பம்பாடி என்று வழங்கப்படும் ஊரில் காணப்படும் 'கோவிசைய விண்ணபருமற்கு' என்று தொடங்கும் நடுகல்லே தொன்மையானதாகக் கருதப்படுகிறது.

1. கோவிசைய விண்ணபருமற்கு நான்காவ[4]
2. து (தகடூரு) நாடாளும் கங்கரைசரு
3. மேல் வந்த தண்டத்தோடு எ
4. றிந்து பட்ட வாண பெருமரைசரு
5. ……………

இந்த நடுகல் அரூர் வட்டம் பாப்பம்பாடியில் உள்ள வேடியப்பன் கோவிலில் உள்ளது. இதில்



Scanned by TapScanner

மூன்று அரச மரபினர் இடம் பெறுகின்றனர். பல்லவர், கங்கர், பாணர் என்ற மூன்று மரபினரே அவர்கள் ஆவார்கள். இந்த நடுகல் அருகே மற்றோர் நடுகல் உள்ளது. அதில் பாணர் மட்டும் இடம் பெற்றுள்ளார். ஏறக்குறைய இரண்டு நடுகற்களின் எழுத்தமைதி ஒன்றாக இருப்பதால் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு என்று குறிப்பிடலாம். கோவிசைய விண்ணபருமனுடைய (விஷ்னு வர்மன் என்க) நான்காவது ஆட்சியிண்டில் இந்த நடுகல் தோற்றுவிக்கப்பட்டது. அப்போது தகடூர் நாட்டைக் கங்க அரசர் ஒருவர் ஆண்டு வந்துள்ளார். அவர் மீது அரசர் தண்டத்தோடு(படையோடு) வந்து போரிட்டார். அப்போரில் இறந்துபட்டவருக்கு நடுகல் எடுக்கப்பட்டது. வாண பெருமரசரைசரு என்ற தொடர் கல்வெட்டின் இறுதியில் வருகிறது. ஐந்தாம் வரி இல்லாததால் வாண பெருமரைசர் போரில் மாண்டவரா? வாண பெருமரைசருடைய சேவகன் மாண்டவரா? தெரியவில்லை. பாண என்ற சொல் வாண என்றும் பருமர் என்பது வர்ம என்ற சமஸ்கிருத சொல்லின் தமிழ் வடிவமாகும். வர்ம என்ற பருமர் அரைசருக்கும் மேல் இருப்பவர் எனலாம்.

வாணருமு அரைசரு சேவகன் உழுமணுகன் மகன்[5]
விசயமங்கலமாண்ட விண்ணப் பேரேனாதிகல்

'பாப்பம்பாடியில், உள்ள மற்றோர் நடுகல் வாண பருமு அரைசரு' என்று தொடங்குகிறது. இதில் பல்லவ மன்னர் பெயர் இல்லை. இந்நடுக்கல்லின்படி, வாண அரசரின் சேவகன் உழமுணு கண் மகன் விண்ணப்பேர் ஏனாதி ஒருவனும், விண்ணப்பேர் ஏனாதி சேவகன் கொற்றத்தை கோடனும் போரில் மாண்டுள்ளனர். இவர்கள் யாருடன் போரிட்டார்கள்? என்ற விவரம் இதில் இல்லை. ஆயின் விஷ்ணுபருமனுடைய நடுகல் கல்வெட்டில் கங்க அரசருடன் வாணபருமர் போரிட்ட காரணத்தால் இந்த நடுகல்லில் வாணபருமர் கங்கருடன் போரிட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது. பாப்பம்பாடியில் விண்ணப்பருடைய நடுகல் சிற்பம், கலை நேர்த்தியுடன் அமைந்துள்ளது. வீரன் இடதுகாலை ஊன்றி வலது காலைப் பின்னோக்கி வைத்துப் பாய்ந்துவரும் நிலையில் உள்ளான். வலதுகை வாளை ஓங்கியும் இடதுகை கேடயத்தை முன் நீட்டியும் காணப்படுகின்றன.

இருளப்பட்டி நடுகற்கள் கி.பி. 4ஆம் நூற்றாண்டை சேர்ந்தவையாகவும் அல்லது 5-ஆம் நூற்றாண்டின் தொடக்க காலமாகவும் இருக்கலாம் என்பதை வட்டெழுத்து தமிழ் என்ற எழுத்துகளின் சான்றுகளின் மூலமாக அறியலாம்.

**சின்னேரி வேடியப்பன் முன்னோர் வழிப்பாடு:**

மனிதன் தன் முன்னோரையும் வழிப்பட்டான். இறந்த பின் தன் முன்னோர்கள் தெய்வ நிலையிலும் ஆவி நிலையிலும் தம்மை காப்பாற்றுகின்றனர் என்று அவன் நம்பினான். அதன் விளைவாக வீட்டில் ஆண்டு தோறும் சடங்குகளுடன் கூடிய முன்னோர் வழிபாடு தோன்றி நிலைத்தது.

"இறந்தவர்களை ஆவி வடிவில் கண்ட மக்கள் அவைகளுக்கு பசியும் தாகமும் பிற தேவைகளும் உண்டு என நினைத்தார்கள். அவர்கள் ஆவி உடலின் பக்கத்தே உறைகின்றது என நம்பிக்கையில் பிணத்தை அடக்கம் செய்யும் போது பக்கத்திலேயே உணவு, நீர், அவர்கள் பயன்படுத்திய பொருட்களை வைத்தார்கள். முற்காலச் சமாதி குழிகளில் எல்லாம் இவைகள் காணப்படுகின்றன. இறந்தவர் நெருங்கிய உறவினர் இறந்தவருக்கு ஒவ்வொரு நாளும் உணவும் நீரும் படைத்து வந்தார்கள். எல்லாமக்களும் இவ்வாறு செய்வது அரிதாயிருந்தது.

**சின்னேரி வேடியப்பன் கோயில்:**

வேடியப்பனை வேளாளர் மட்டுமின்றி நாயக்கர், முதலியார், மலையாளிகள், உடையார் முதலான பல்வேறுபட்ட இனமக்களும் வணங்குகின்றனர். அவர்கள் தங்கள்



Scanned by TapScanner

துன்பங்களையும் கவலைகளையும் போக்கும் கடவுளாக வேடியப்பனை எண்ணுகின்றனர்.

சின்னேரி வேடியப்பனை இனம், குலம் ஆகிய வேறுபாடுகளைக் கடந்து அவ்வூரைச் சுற்றியுள்ள பல ஊர்களின் மக்களும் வந்து வணங்குகின்றனர். எனவே சின்னேரி வேடியப்பன் கோயில் ஊர்க் கோயில் வகையைச் சார்ந்தது ஆகும்.

**சின்னேரி வேடியப்பன் கோயில் அமைவிடம்:**

தருமபுரி மாவட்டத்திலுள்ள அரூரிலிருந்து சேலம் செல்லும் நெடுஞ்சாலையில் 17 கி.மீ. தொலைவில் அதிகாரப்பட்டி உள்ளது. அவ்விடத்தில் 'சின்னேரி வேடியப்பன் திருக்கோயில்' நுழைவுவாயில் ஒன்றுள்ளது. அங்கிருந்து அரை கிலோ மீட்டர் தொலைவில் கோயில் அமைந்துள்ளது.

சின்னேரி வேடியப்பன் கோயில் கிழக்குத் திசையை நோக்கியவாறு ஊரின் தென் மேற்கு மூலையில் இருக்கிறது. "ஐயனாருடைய ஆலயம் கிராமத்திற்கு வெளியில் தென்மேற்கு மூலையில் இருக்க வேண்டும் என்று ஈசான சிவகுரு தேவ பத்ததியில் கூறப்படுகிறது. ஐயப்பனுக்கு 'புறம்பணயான்' என்ற பெயரும் உண்டு. ஊருக்குப் புறம்பே கொண்டவன் என்பது இதற்குப் பொருள்" என்று கூறப்படுகிறது.

**சின்னேரி வேடியப்பன் கோயில் அமைப்பு**

சின்னேரி வேடியப்பன் கோயில் வெளிமண்டபம், உள்மண்டபம், கருவறை என்றவாறு அமைற்துள்ளது. இக்கோயிலின் பின்புறம் கூக்குட்டை மரத்தின் அடியில் இங்கு முதலில் வேடியப்பன் எழுந்தருளிய இடத்தில் சிறிய கோயில் அமைந்துள்ளது. அந்தப் பழைய கோயிலுக்கு முன்புறமாகப் புதிய கோயில் கட்டப்பட்டுள்ளது.

**சின்னேரி வேடியப்பன் கோயில் கருவறை**

சின்னேரி வேடியப்பன் கோயில் கருவறை 10.75 அடி நீளமும் அடி அகலமும் 6.25 அடி உயரமும் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. கோயில் கருவறையில் மரத்தாலான மூன்று சிலைகள் உள்ளன.

**வேடியப்பன் சிலை:**

கருவறையின் இடப்பக்கம் உள்ள வேடியப்பன் சிலை வலக்கால் மண்டியிட்டு இடக்கால் மடக்கி நிற்பது போன்ற தோற்றத்தில் உள்ளது. வேடியப்பன் வலக்கையில் கொடுவாளும் இடக்கையில் வேலும் ஏந்தியவாறு கம்பீரத்துடன் காட்சி அளிக்கிறார். நெற்றியில் நாமம் தரித்துள்ளார். அகன்ற விழிகளுடன் கழுத்தில் உருத்திராட்சை மாலை அணிந்துள்ளார். சிறுதெய்வங்கள் அமைந்துள்ள நிலையை "ஆண் தெய்வங்கள் நின்ற கோலத்திலும் ஒரு காலை மட்டும் முழங்காலிட்ட கோலத்திலும், தவழ்ந்த கோலத்திலும் காணப்படும்.

**சின்னேரி வேடியப்பனின் வழிபாட்டு முறை**

சின்னேரி வேடியப்பன் கோயிலில் நம்பிக்கையின் அடிப்படையில் பல சடங்குகளும் வழிபாடுகளும் நிகழ்த்தப்படுகின்றன.

பூவாக்குக்கேட்டல், பேயோட்டுதல், குழந்தைப்பேறுவேண்டுதல், மொட்டையடித்தல், திரிசுத்திப் போடுதல், தீர்த்தம் போடுதல், நேர்த்திக் கடன் செலுத்துதல், அபிஷேகம் செய்தல், செய்வினையை அழித்தல், மெரமனை எடுத்தல், வேண்டுதல் ஆகியன மக்களின் அழுத்தமாக நம்பிக்கையின் விளைவாகவே நிகழ்கின்றன.

பக்தர்கள், தாங்கள் நினைத்த காரியம் கைகூடுதல், திருமணம் நடைறெல், குழந்தைப்பேறு வேண்டுதல், நிலபுலன்கள் வாங்குதல், வீடு வாகனம் கால்நடைகள் வாங்குதல், வேலைவாய்ப்புகள், விவசாயம் செழிப்படைதல், உடல் நலம்பெற வேண்டுதல் முதலானவற்றிற்கு வேடியப்பனிடம் பூ வாக்குக் கேட்கின்றனர்.

**முடிவுரை:**

இருளப்பட்டி மற்றும் அதைச்சார்ந்த கிராமங்களில் வாழும் மக்கள் சின்னேரி வேடியப்பனை வழிபடுவதில் ஒரு சில் உறுதியான



Scanned by TapScanner

நம்பிக்கைகளைக் கொண்டுள்ளனர். தனிமனிதர் சார்ந்த, குடும்பம் சார்ந்த சில செயல்களைத் தொடங்குவதற்குப் பக்தர்கள் கோயிலுக்கு வந்து பூ வாக்குக் கேட்கின்றனர். வேடியப்பன் பூ வாக்குக் கொடுத்த பின்னர் செய்யப்படும் செயல்களே இனிது நிறைவேறும் என அவர்கள் நம்புகின்றனர். வீரர்களுக்குக் கல்லெடுத்து, படைப்புப் பொருள்களைப் படைத்து, அவர்களது ஆவியைச் சாந்தி செய்யாவிட்டால், தீமை விளையக்கூடும் என்ற அச்சவுணர்வு மக்களுக்கு இருந்தது் நடுகற்களை எழுப்பி, விழா எடுத்து, பல படைப்புப் பொருள்களைப் படைத்து வீரனுடைய ஆவியைச் சாந்தி செய்வதன் மூலம், பல நன்மைகளைப் பெறமுடியும் என்ற மக்களின் பயன் பாட்டு நோக்கம், எனவே நடுகல்வழிபாட்டிற்கான அடிப்படைக் காரணங்களாக இருக்க வேண்டும் என்பதை இக்கட்டுரையின் வழியாக அறியும் செய்தியாகும்.

**அடிக்குறிப்பு பட்டியல்:**

1. சங்க இலக்கியத்தில் மறவர்கள், முனைவர் கலைச்செல்வி, பக்கம் -199, முதல்பதிப்பு-2011, வெளியீடு-காவ்யா பதிப்பகம், 16, இரண்டாம் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை-600 024.
2. தென்னிந்திய நடுகற்கள், முனைவர் வெ.கேசவராஜ், பக்கம்-80, முதல்பதிப்பு - 2008, வெளியீடு – காவ்யா பதிப்பகம், 16, இரண்டாம் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை-600 024.
3. புறநானூறுபகுதி-2, முனைவர் இரா.பிரபாகரன், பக்கம்-141, முதற் பதிப்பகம்-டிசம்பர் 2013, வெளியீடு-காவ்யா பதிப்பகம், 16, இரண்டாம் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை-600 024.
4. நடுகற்கள், சரித்திர செம்மல் - ச.கிருஷ்ணமூர்த்தி, பக்கம் -148, முதல் பதிப்பு-டிசம்பர் 2004, மெய்யப்பன் பதிப்பகம், மாணிக்கவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை -600 021.
5. தகடூர்-தருமபுரி வரலாற்றுச் சுவடுகள், முனைவர் ஆ.கோ.குலோத்துங்கள், மருத்துவர் கி.சூத்தரசன், பக்கம் -59, முதல் பதிப்பு-2013, மாணிக்கவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை-600 021.

**தகவலாளர் பட்டியல்:** 1. A.V.S இளங்கோவன், அதிகாரப்பட்டி (P.o), பாப்பிரெட்டிபட்டி (T.k), தருமபுரி -636 905.

ஃ



Scanned by TapScanner